மதுரை வழியாக வருகின்ற பல்வேறு பேருந்துகள், சொகுசு பேருந்துகள் அந்த வழியாக வருகின்ற காரணத்தால் தேவையில்லை என்று நான் குறிப்பிட்டேன். ஆகவே அதற்கு சாத்திய கூறுகள் இல்லை.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சூப்பர் டிலக்ஸ் விடாவிட்டால் ஒரு பஸ் பை-பாஸிலிருந்தாவது விடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி பை-பாஸில் சென்று கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை பேருந்து நிலையத்திற்கு வேண்டும் என்றாலும் திருப்பி அந்த வழியாக செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையே மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். உடனடியாக விட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். ஆகவே மிக விரைவாக சூப்பர் டிலக்ஸ் என்ற பேருந்து விடுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *367*, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை.

வினா எண் *368*, திரு. சா. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை.

வினா எண் *369*, திரு. கே. தவசி, இருக்கையில் இல்லை.

வினா எண் *370*, திரு. ஆ. செல்லதுரை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

370—

நங்கைமொழி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

34342*—திரு ஆ. செல்லதுரை:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 20]

(அ) திருச்செந்தூர்-சாத்தான்குளம் சாலையில் நங்கைமொழி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. செல்லதுரை: வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்தச் சாலையானது திருச்செந்தூரிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்கின்ற சாலையாகும். இது மிகப் பெரிய சாலை. 10 நிமிடங்களுக்கு ஒரு முறை பேருந்துகளும், லாரிகளும், வேன்களும், கார்களும் போய் வந்துகொண்டிருக்கின்ற மிகப் பெரிய சாலை இது. இந்தச் சாலையில் நங்கைமொழி பக்கத்தில் கிட்டத்தட்ட நான்கு அடி ஆழமான ஒரு ஓடை இருக்கிறது. அந்த ஓடையில் மழைக் காலங்களில் வெள்ளம் ஏற்பட்டு, அந்த ஓடையிலே தண்ணீர் ஓடுகிறபோது அதிலே ஒரு மாதகாலம் அல்லது 15, 20 நாட்களுக்கு பேருந்துகளும், இதர வாகனங்களும் போக முடியாமல், செல்ல முடியாமல் பொது மக்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அப்படிப் போகின்றபோது போக்குவரத்து தடைபடுகின்ற காரணத்தினாலே பொதுமக்களுக்கு வசதி வாய்ப்புகள் குறைந்து மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இல்லை என்ற சொல்லை மறுபரிசீலனை செய்து ஒரு சிறிய பாலத்தையாவது அங்கே அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓடையில் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இப்போது அரசினுடைய நிதிப் பற்றாக்குறையின் காரணத்தினாலே இந்தப் பணியினை அண்மைக் காலத்திலே மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[1995 ஏப்ரல் 20

திரு. ஆ. செல்லதுரை: வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிநிலையின் காரணமாக இல்லை என்று சொன்னார்கள். 50 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அந்தப் பாலத்தை கட்டாவிட்டாலும், அந்தப் பாலத்தினுடைய நீளமே கிட்டத்தட்ட 25 மீட்டர் இருக்கும் அல்லது 30 மீட்டர்தான் இருக்கும். இதிலே குழாய்களைப் பதித்து ஒரு சிறிய தாம்போகியையாவது போட்டுத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஓடையினுடைய அகலத்தைக் குறிப்பிடுகின்றபொழுது, 250 மீட்டர் என்று குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே, தரைமட்டப் பாலம் கட்டுவது என்றாலும்கூட 50 இலட்சம் ரூபாயாகும் என்று மதிப்பீடு சொல்லப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே நான் தெரிவித்தது தரைமட்ட பாலத்திற்குத்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுசம்பந்தமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற போக்குவரத்து அலகுகளைப் பற்றி தீவிரமாக பரிசீலனை செய்து மேல் நடவடிக்கையை இந்த அரசு எடுப்பதற்கான உரிய முயற்சிகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 371, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

371—

பேரணாம்பட்டு பேரூராட்சியில் வீட்டு வசதி வாரிய வீடுகள்

35716*—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டும் பணி துவங்கப்படும்?